# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
# මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

**No:** 24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
**Tel:** +94 11 2565304 – 6, 5552746, 5552749, **Fax:** +94 114714460
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org

**வட மாகாண சபை தேர்தல்கள் 2013**

**செப்டெம்பர் 21, 2013**

**தேர்தல்களின் நிறைவு 16.00 மணி**

முன்னைய தேர்தல்களுடன் ஒப்பிடும் போது வட மாகாண சபை தேர்தல்கள் ஒப்பீட்டளவில் ஓர் உயர்வான வாக்களிப்பு வீதத்தைக் கண்டது. தேர்தல் தினத்தன்று பதிவு செய்யப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை ஓர் உயர்ந்த அதிர்வைக் கொண்டிராததினால், தேர்தல் தினமும் மற்றும் பிரச்சார காலங்களும் ஒரு தொடர்ச்சியான தேர்தல் ஒழுங்கீனங்கள் மற்றும் மீறல்களைக் கண்டமையானது சுதந்திரமானதும் மற்றும் நீதியானதுமான தேர்தல் செயன்முறைகளைச் சீர்குலைத்தது. தேர்தல் தினத்தன்று எரியூட்டல் நடவடிக்கைகள், தாக்குதல் மற்றும் அச்சறுத்தல், வாக்காளர்களை போக்குவரத்துச் செய்தல், பிரச்சாரம் செய்தல், மற்றும் தேர்தல் கண்காணிப்பாளர் ஒருவரைத் தாக்கியமை உட்பட பல சம்பவங்கள் நடைபெற்றன. பிரச்சார காலங்களின் போது அரச வளங்களின் துஷ்பிரயோகம், அதிகரித்த இராணுவப் பிரசன்னம் மற்றும் அரசாங்கத்தின் ஆதரவிற்காக ஈடுபடுதல், மற்றும் சிவில் உடையிலான நபர்கள் மற்றும் இனந் தெரியாத ஆட்கள் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகள் மற்றும் சாததியம் கொண்ட வாக்காளர்களை அச்சுறுத்தப்பட்டமை உட்பட்ட பல முக்கியமான பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியது.

தேர்தல் தினமான, செப்டெம்பர் 21 அன்று, தே.வ.க.நி 240 தேர்தல்கள் கண்காணிப்பாளர்களை தனிப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் ஈடுபடுத்தியதிற்கு மேலாக 17 கள கண்காணிப்பாளர்களையும் மற்றும் 8 நடமாடும் பிரிவுகளையும் சேவையிலீடுபடுத்தியது. தே.வ.க.நி இன் அனைத்து அறிக்கைகள் மற்றும் செய்தி அறிக்கைகள் மற்றும் சம்பவங்களின் கூகிள் வரைபடங்கள் என்பன http://cmev.wordpress.com எனும் தொடரறா இணைப்பில் அணுகப்பட முடியும்.

தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் அரசியல் வன்முறைக்கு எதிரான கூட்டு என்பவற்றால் 1997 இல், தேர்தல் தொடர்பான வன்முறையைக் கண்காணிப்பதற்காக, ஓர் சுயாதீன மற்றும் கட்சிச்சார்பற்ற ஸ்தாபனமாக உருவாக்கப்பட்டது. தற்போது தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இன்போர்ம் (INFORM) மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் என்பவற்றால் ஆக்கப்பட்டுள்ளது.

**தே.வ.க.நி ஆல் அறிவிக்கப்பட்டவாறு நண்பகல் 12.00 இலிருந்து பி.ப 4.00 வரையான முக்கியமான சம்பவங்களின் பட்டியல்:**

**இல.1 அம்பாள்புரம் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையத்திலிருந்து 5 கி.மீ க்கு அப்பால், முல்லைத்தீவு மாவட்டம், முல்லைத்தீவு தேர்தல் தொகுதி**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் முகவர் அடைக்கப்பல் பூபாளன் மற்றும் நட்டாங்கல் வாக்களிப்பு நிலையத்தோடு இணைந்த பப்பெரல் அமைப்பின் நாள் அவதானிப்பாளரான அவரது மனைவி பூபாளன் இந்திரா ஆகியோர்களின் வீடு இன்று பி.ப 2.30-3.00 அளவில் முற்றிலுமாக எரித்து தரைமட்டமாக்கப்பட்டது.

அவர்களது வீடு, முல்லைத்தீவின் அம்பாள்புரம் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையத்திலிருந்து பாலிநகரில் அமைந்திருந்தது. இந்த சம்பவமானது அவ்விருவரும் வீட்டில் இல்லாத சமயத்தில் நிகழ்ந்துள்ளது. அவர்களது 8, 13 மற்றும் 14 வயதுகளுடைய மூன்று பிள்ளைகளும் கூட சம்பவம் நிகழ்ந்த சமயத்தில் வீட்டில் இருக்கவில்லை.

பாதிக்கப்பட்ட அடைக்கப்பல் பூபாளன் இத்தாக்குதல் ஐ.ம.சு.கூ வேட்பாளர் அதாசிவம் கனகரத்னத்தின் ஆதரவாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சாட்டுகிறார். பாதிக்கப்பட்டவர் தான் இலங்கை தமிழரசுக் கட்சியின் தேர்தல் முகவராக இருந்ததினாலேயே இச்சம்பவம் நிகழ்ந்ததாக குற்றஞ் சாட்டுகிறார்.

த.தே.கூ ஆதரவாளர் திரு. ரத்திஸ், தான் முல்லைத்தீவு மாவட்ட ஐ.ம.சு.கூ வேட்பாளர் அதாசிவம் கனகரத்னத்தின் ஆதரவாளர்களான அம்பாள்புரத்தைச் சேர்ந்த ரத்னராஜா, வன்னிவிளாங்குளத்தைச் சேர்ந்த கே.கிருஸ்ணகுமார் மற்றும் கொல்லவிளாங்குளத்தைச் சேர்ந்த பிருந்தா ஆகியவர்களால் அச்சுறுத்தப்பட்டதாக தே.வ.க.நி இற்கு அறிவித்தார்.

**இல.5, திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய மண்டப இல.2, வாக்களிப்பு நிலையம், யாழ்ப்பாண மாவட்டம், நல்லூர் தேர்தல் தொகுதி**

நல்லூர் பிரதேச சபைத் தவிசாளரும், த.தே.கூ இன் பிரதேச சபை உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், வாக்களிப்பு நிலையத்துக்கு ஒரு மகேந்திர ஜீப் வண்டியில் வந்த பொலிஸ் உத்தியோகத்தரால் (இல.862757) தாக்கப்பட்டார். பாதிக்கப்பட்டவர் தனது வாக்கை பி.ப 1.30 அளவில் அளித்த பின்னர் வாக்களிப்பு நிலையத்தை விட்டு வெளியே வந்த சமயம் தாக்குதல் நடைபெற்றது. தாக்குதலில் பாதிக்கப்பட்டவர் காயங்கள் எதனையும் அடையவில்லை.

**இல.19 கிளிநொச்சி/ சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம், கிளிநொச்சி மாவட்டம், கிளிநொச்சி தேர்தல் தொகுதி**

சுதந்திரமானதும் மற்றும் நீதியுமானதுமான தேர்தலுக்கான மையத்தின் கண்காணிப்பாளர் ஒருவரான என்.குனேசராசா கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இல.19, சமதாபுரம் கலைமகள் வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திற்கருகில் வைத்து பி.ப 2.00 மணியளவில் தாக்கப்பட்டார். பாதிக்கப்பட்டவர் தற்போது கிளிநொச்சி ஆதார வைத்தியசாலை வாட் இல.06 இல் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார். கபே அமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளர் திரு. கீர்த்தி தென்னக்கோன் அவர்களை தே.வ.க.நி நேர்கண்ட போது தாக்குதலை மேற்கொண்டவர், ஒர் ஈ.பி.டி.பி ஆதரவாளரான சந்திரன் என அடையாளம் காணப்பட்டதாக அவர் கூறினார்.

**இல.38, மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை, யாழ்ப்பாண மாவட்டம், பருத்தித்துறை தேர்தல் தொகுதி, மருதங்கேணி**

மு.ப. 11.00 அளவில், த.தே.கூ இன் பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் பி. சஞ்ஜீவன், ஈ.பி.டி.பி இன் ஆதரவாளர்கள் வாக்களிப்பதற்காக செல்லும் மக்களின் வழிகளை தடைசெய்ததுடன் ஐ.ம.சு.கூஇற்கு வாக்களிக்கும்படி மக்களிடம் கூறியதாக தே.வ.க.நி கண்காணிப்பாளரக்கு அறிவித்தார். தேர்தல் மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறுகின்றதாகவும் மற்றும் ஈ.பி.டி.பி/ஐ.ம.சு.கூ ஆதரவாளர்கள் வாக்களிப்பு நிலையத்துக்கு இட்டுச் செல்லும் வழிகளை தடைசெய்து மக்களைச் அச்சுறுத்தினர். இந்த வாக்களிப்பு நிலையத்தில் பொலிஸ் கடமையில் இருந்ததோடு நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. வாக்காளர்களுக்கு தொந்தரவைக் கொடுத்த குழு மதுபோதையில் இருந்ததாக வாக்காளர்கள் குற்றஞ் சாட்டினர்.

**இளவாலை, இல.21, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையம், யாழ்ப்பாண மாவட்டம், காங்கேசன்துறை தேர்தல் தொகுதி**

இளவாலையிலுள்ள வாக்களிப்பு நிலையம் 21 இற்கு அருகாக மு.ப 10.30 இற்கும் மற்றும் பி.ப 12.30 இற்கும் இடையில் காங்கேசன்துறையில் சிவில் உடையில் உள்ள இராணுவ உத்தியோகத்தர்களும் மற்றும் புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு அவர்களது வாக்கை யாழ்ப்பாண மாவட்டத்தில் இல.1 இல் போட்டியிடும் ஐ.ம.சு.கூ வேட்பாளர் திரு. அங்கஜன் இராமநாதனுக்கு அளிக்கும்படி கேட்டுக் கொண்டதாக தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது.

**அல் அக்சா மகா வித்தியாலயம், இல.14, வவுனியா/அல் அக்சா மகா வித்தியாலயம் சாளம்பைக்குளம் வாக்களிப்பு நிலையம், வவுனியா மாவட்டம், வவுனியா தேர்தல் தொகுதி**

தே.வ.க.நி கண்காணிப்பாளரால் அறிவிக்கப்பட்டபடி, பி.ப.12.15 அளவில் 58-7007 பதிவிலக்கம் கொண்ட மற்றும் ஐ.ம.சு.கூ வேட்பாளர் முத்து மொகமெட் (வேட்பாளர் இலக்கம் 03) இன் சுவரொட்டிகளைக் கொண்ட வானில் சில வாக்காளர்கள் போக்குவரத்துச் செய்யப்பட்டனர்.

**இல.47 மன்னார்/ அரிப்பு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையம், மன்னார் மாவட்டம், மன்னார் தேர்தல் தொகுதி**

அருட் தந்தை தவராஜா தனது வாக்கை அளிப்பதற்காக மன்னார்/ அரிப்பு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையத்துக்கு சென்றார். வாக்களிப்பு நிலையம் வாக்காளர்களால் நிறைந்திருந்ததால், அருட் தந்தை தவராஜா உட்பட வாக்களிப்பு நிலையத்துக்கு அருகேயுள்ள ஒரு வீட்டில் கூடி நின்றனர். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் சிலாவத்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் அந்த வீட்டில் தேர்தல் பிரச்சாரம் நடைபெறுவதாக சந்தேகித்து வாக்காளர்கள் கூடி நின்ற வீட்டிற்கு வந்தனர். கூடிநின்றவர்களிடம் பொலிசார் ஏன் வாக்களிக்கவில்லை என கேள்வி எழுப்பினர், அருட் தந்தை பொலிசாருடன் வாதத்தில் ஈடுபட்டதுடன் பொலிஸ் அருட் தந்தையை தள்ளியதுடன் அவரது சகோதரரைத் தாக்கியது. பின்னர், சகோதரரை ஏன் தாக்கியதாக பொலிஸை அருட் தந்தை வினவிய போது, பொலிசார் அதற்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டனர். ஒரு பொலிஸ் முறைப்பாடும் செய்யப்பட்டது.

**இல.29, யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையம், யாழ்ப்பாண மாவட்டம், கோப்பாய் தேர்தல் தொகுதி**

காலை 7.00 மணியளவில், வாக்களிப்பு நிலையத்திலுள்ள வாக்குப் பெட்டி ஒன்று, அதற்கு ஒட்டப்பட்டப் பட்டிருக்க வேண்டிய மூன்று ஸ்டிக்கர்களைக் கொண்டிருக்காததை தே.வ.க.நி கண்காணிப்பாளர்கள் அவதானித்தனர். பி.ப 2.45 அளவிலும் கூட வாக்குப் பெட்டி மீது ஸ்டிக்கர்கள் காணப்படவில்லை.

| | | |
|---|---|---|
| கலாநிதி பா.சரவணமுத்து<br>இணை-அழைப்பாளர் | சுனில் ஜயசேகர<br>இணை-அழைப்பாளர் | உதய கலுபதிரண<br>இணை-அழைப்பாளர் |